

நெல்லை நாடாளுமன்றத் தொகுதி காங்கிரஸ் வேட்பாளர் ராபர்ட் புரூஸை ஆதரித்து நெல்லை மாவட்டம் பணகுடியில் அமைச்சர் அனிதா ராதாகிருஷ்ணன் கை சின்னத்திற்கு வாக்குச் சேகரித்து பேசினார். உடன் மாவட்ட அவைத்தலைவர் கிரகாம்பெல், தலைமைச் செயற்குழு உறுப்பினர் ஆ.பிரபாகரன், ஒன்றிய செயலாளர்கள் ஜெகதீஸ்,ஜோசப் பெல்சி, ஆரோக்கிய எட்வின், மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் அலெக்ஸ் அப்பாவு,மகளிர் அணி மல்லிகா அருள், உமரிசங்கர், ஜெகன் ராமஜெயம் உள்பட பலர் உள்ளனர்.



வேலூர் நாடாளுமன்றத் தொகுதி கழக வேட்பாளர் டி.எம்.கதிர் ஆனந்த் சத்துவாச்சாரி 21வதுவார்டில் உதயசூரியன் சின்னத்திற்கு வாக்குச் சேகரித்தார். இதில் மாவட்ட அவைத் தலைவர் தி.அ.முகமதுசகி, மாநகர செயலாளர் ப.கார்த்திகேயன்எம்.எல்.ஏ, கொள்கை பரப்பு துணை செயலாளர் டாக்டர் வீ.எஸ்.விஜய், மாவட்ட துணை செயலாளர் ஆர்.பி.ஏழுமலை, மாநகராட்சி மேயர்சுஜாதா, பகுதி செயலாளர் ஆர்.பி.சசிக்குமார், மாமன்ற உறுப்பினர் சக்கர வர்த்தி, வட்டக் கழகச் செயலாளர் ஆர்.பி.ரமேஷ், சாந்தி அம்பேத்கர், சண்முகம், சங்கர் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### நெல்லை - பாளையங்கோட்டை தொகுதிகளின் 'இந்தியா' கூட்டணியின் செயல்வீரர்கள் கூட்டம்!

# காங்கிரஸ் வேட்பாளர் ராபர்ட் புரூஸ் அறிமுகக் கூட்டம்! கே.வி.தங்கபாலு பேச்சு!

## டி.பி.எம்.மைதீன்கான் தலைமை! இரா. ஆவுடையப்பன் முன்னிலை!

நெல்லை, ஏப்.2-

நெல்லை, பாளையங்கோட்டை சட்டமன்ற தொகுதிகளின் 'இந்தியா' கூட்டணியின் செயல்வீரர்கள் கூட்டம் மற்றும் நெல்லை நாடாளுமன்றத் தொகுதி காங்கிரஸ் வெற்றி வேட்பாளர் ராபர்ட் புரூஸ் அறிமுகக் கூட்டம் நெல்லை கொக்கிரகுளம் ரோஸ் மஹாலில் நெல்லை மத்திய மாவட்டக் கழக பொறுப்பாளர் டி.பி.எம்.மைதீன்கான் தலைமையில் நெல்லை கிழக்கு மாவட்ட கழக செயலாளர் இரா. ஆவுடையப்பன் முன்னிலையில் நடைபெற்றது.

நிகழ்ச்சியை மாநில வர்த்தக அணி இணைச் செயலாளர் மாலைராஜா தொகுத்து வழங்கினார்.

இந்நிகழ்வில் தமிழ்நாடு காங்கிரஸ் முன்னாள் தலைவர் முன்னாள் ஒன்றிய அமைச்சர் கே.வி.தங்கபாலு பங்கேற்று பேசியதாவது.

இந்திய அளவில் இந்தியா கூட்டணி உருவாக மூலகாரணமானவர் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தான். கடந்த சட்டமன்ற தேர்தலின் போது எனது சார்பில் சேலத்தில் மாபெரும் பேரணி நடத்தினேன். இதில் ராகுல்காந்தி, மு.க.ஸ்டாலின் கலந்து கொண்டனர்.

அப்போதே மு.க.ஸ்டாலின் தமிழகத்தில் வெற்றிக் கூட்டணி அமைத்து தேர்தலை சந்திக்கிறோம், இது போன்று இந்திய அளவில் ஒரு கூட்டணியை உருவாக்குங்கள் என ராகுல்காந்தியிடம் கூறினார். சென்னையில் நடைபெற்ற தலைவர் மு.க.ஸ்டாலின் பிறந்தநாள் விழாவில் அகில இந்திய காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே கலந்து கொண்டு வாழ்த்து தெரிவித்தார்.

அப்போது மு.க.ஸ்டாலின் ஏற்புரை நிகழ்த்தி பேசும் போது மதச்சார்பற்ற கூட்டணி அமைய, மதவாதத்தை வீழ்த்த,பி.ஜே.பி.யை வீட்டுக்கு அனுப்ப இந்தியாவில் ஜனநாயகத்தை காக்க ஒரு கூட்டணியை உருவாக்கி தாருங்கள் என மல்லிகார்ஜுன கார்க்கேவிடம் பிறந்தநாள் செய்தியாக சொன்னார். அதனைத் தொடர்ந்து இன்று இந்தியா கூட்டணி அமைக்கப்பட்டு வெற்றி நடைபோடுகிறது .தமிழகத்தில் முதலமைச்சராக மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆட்சிப்பொறுப்பேற்று 2½ ஆண்டு காலத்தில் 90 சதவீதத்திற்கு மேலாக வாக்குறுதிகளை நிறைவேற்றியுள்ளார். 2004 முதல் 2014 வரை தி.மு.க.காங்கிரஸ் கூட்டணி ஆட்சியில் இருந்த போது முத்தமிழ் அறிஞர் கலைஞர் கேட்ட அனைத்து திட்டங்களும் நிறைவேற்றப்பட்டது.

ஆனால் கடந்த 10 ஆண்டு கால பா.ஜ.க. ஆட்சியில் தமிழகத்திற்கு எந்த திட்டமும் இல்லை,பெண்கள், விவசாயிகள், மீனவர்கள் என அனைத்து தரப்பினரும் வேதனையில் உள்ளனர். ஊழலில் ஊறி திளைத்த ஆட்சி மத்தியில் நடக்கிறது, மோடி மஸ்தான் வேலை தமிழகத்தில் எடுபடாது. 40 தொகுதிகளிலும் இந்தியா கூட்டணி அமோக வெற்றி பெறும். முதலமைச்சர் தளபதி அவர்கள் சொல்லுவது போல் நாற்பதும் நமதே நாடும் நமதே.நெல்லை நாடாளுமன்றத் தொகுதி வேட்பாளர் ராபர்ட் புரூஸ்க்கு கை சின்னத்திற்கு வாக்களியுங்கள், பா.ஜ.க.வை வீட்டிற்கு அனுப்புங்கள் என்று பேசினார்.

முன்னதாக நெல்லை மத்திய மாவட்ட தி.மு.க பொறுப்பாளர் டி.பி.எம். மைதீன்கான் பேசுகையில். எதிர்த்து போட்டியிடும் நயினார்நாகேந்திரன் அவர்கள் அந்த கட்சியில் அவர் மட்டும்தான் இருப்பது போல், வெற்றி பெற்றாலும் அவர்தான் வேட்பாளர், தோற்றாலும் அவர்தான் வேட்பாளர் அவர் எல்லோருக்கும் வணக்கம் போடுபவராக இருக்கலாம், நமக்குள் உறவு இருக்கலாம் ஆனால் அரசியல் என்று வந்துவிட்டால் நீவேறு, நாங்கள் வேறு நமக்குள் சமரசம் செய்து கொள்ள கூடாது என இங்கு இருப்பவர்களிடம் கேட்டுக் கொள்கிறேன். உறவை சொல்லி வரும்போது நீங்கள் ஏமாந்து விடக்கூடாது, நமது வேட்பாளர் ராபர்ட் புரூஸ் வெற்றிபெற அயராது உழைக்க வேண்டும் என்று பேசினார்.

நெல்லை கிழக்கு மாவட்ட செயலாளர் இரா.ஆவுடையப்பன் பேசுகையில்.

இந்தியாவில் ஜனநாயகம் வேண்டுமா,

பாசிசம் வேண்டுமா என்ற நிலை ஏற்பட்டுள்ளது,ஜனநாயகம் காக்க இந்தியா கூட்டணி வெற்றிபெற வேண்டும்.பா.ஜ.க மதத்தை மட்டும் குறிக்கோளாக வைத்து செயல்படும் இயக்கம்,மக்களுக்கு எந்த நல்ல திட்டங்களையும் தரவில்லை. ஜனநாயகம் காக்க மக்களுக்கு நல்ல திட்டங்கள் கிடைக்க மோடி அரசு அகற்றபட வேண்டும் என்று பேசினார்.

இந்த கூட்டத்தில் கங்கிரஸ் கட்சியின் தமிழக பார்வையாளர் ஸ்ரீவல்லபிரசாத், சட்டதிட்ட தீர்மானக் குழு உறுப்பினர் சுப.சீதாராமன் பாளையங்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் மு.அப்துல்வகாப்,மாநில மகளிரணி செயலாளர் ஹெலன் டேவிட்சன், நெல்லை தொகுதி பார்வையாளர் வசந்தம் ஜெயகுமார்,முன்னாள் அமைச்சர் பூங்கோதை ஆலடி அருணா, மாநகர செயலாளர் சுப்பிரமணியன்,தலைமை செயற்குழு உறுப்பினர்கள்ஏ.எல்.எஸ்.லெட்சுமணன், பேச்சி பாண்டியன்,முன்னாள் ஒன்றிய அமைச்சர் தனுஷ் கோடி ஆதித்தன், மேயர் சரவணன், துணை மேயர் ராஜு,

மாவட்டத் துணைச் செயலாளர்கள் சுரேஷ், தர்மன்,கிரிஜாகுமார்,மகளிர் தொண்டர் அணி துணைச் செயலாளர் விஜிலாசத்தியானந்த்,மாவட்ட அவை தலைவர் முருகன், பகுதி செயலாளர்கள் சுப்பிரமணியன்,நமச்சிவாயம்,

அன்டன் செல்லதுரை, துபாய் சாகுல்,

ஒன்றிய செயலாளர்கள் அருள்மணி, அன்பழகன், மாரியப்பன்,முருகன்,

மண்டல தலைவர்கள் மகேஸ்வரி,

ரேவதிபிரபு,கதீஜா இக்லாம் பாசிலா,

துணைச் செயலாளர் மூளிகுளம் பிரபு,

பேரூர் செயலாளர் செல்வபாபு,பேச்சி குட்டி,மாநகர இளைஞரணி அமைப்பாளர் கருப்பசாமி கோட்டியப்பன்,மத்திய மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் வில்சன் மணித்துரை,துணை அமைப்பாளர்

மீரான்மைதீன்,மாநகர மாவட்ட காங்கிரஸ் தலைவர் சங்கரபாண்டியன், ம.தி.மு.க.மாநகர மாவட்ட செயலாளர் நிஜாம்,சி.பி.எம்.மாவட்ட செயலாளர் ஸ்ரீராம்,சி.பி.ஐ.துணைச் செயலாளர் சேதுராமலிங்கம்,சி.பி.ஐ.எம்.எல். மாவட்டச் செயலாளர் சுந்தர்ராஜ், வி.சி.க மாநகர் மாவட்ட செயலாளர் முத்து வளவன்,புறநகர் மாவட்ட செயலாளர் சேகர்,இந்திய யூனியன் முஸ்லிம்லீக் கட்சி மீரான்மைதீன், ம.ஜ.க மாவட்ட செயலாளர் பாரூக், துணைச் செயலாளர் அலிப் பிலால் ராஜா,த.வா.க.இளைஞர் அணி தலைவர் நவ்ஷாத் அலி,ம.ம.க. ஜெகதீஷ்,ரசூல் மைதீன்,திராவிட கழகம் வேல்முருகன், திராவிட இயக்க தமிழர் பேரவை சந்தானம்,அகில இந்திய பார்வர்டு மணி பாண்டியன் திராவிடத் தமிழர் கட்சி கதிரவன்,தமிழ் புலிகள் கட்சி நெல்லை தமிழரசு,ஆதி தமிழர் பேரவை இளமாறன் கோபால்,இந்திய தேசிய லீக் ஷேக்மைதீன் உள்பட கூட்டணிக் கட்சி நிர்வாகிகள் திரளாக கலந்து கொண்டனர்.

### மாவட்டச் செயலாளர் சேடப்பட்டி மு.மணிமாறன் தலைமையில் - திருப்பரங்குன்றம்,

# திருமங்கலத்தில் கூட்டணி வேட்பாளர் மாணிக்கம் தாகூர் அறிமுக கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் - அமைச்சர் பி.மூர்த்தி சிறப்புரை!

மதுரை, ஏப் 02-

மதுரை தெற்கு மாவட்ட திமுக சார்பில் விருதுநகர் நாடாளுமன்றத்துக்கு உட்பட்ட திருப்பரங்குன்றம், திருமங்கலம் தொகுதியில் இந்தியா கூட்டணி காங்கிரஸ் கட்சி வேட்பாளர் மாணிக்கம் தாகூர் அறிமுகம் மற்றும் செயல்வீரர்கள் கூட்டம் மாவட்ட செயலாளர் சேடப்பட்டி மு.மணிமாறன் தலைமையில் நடைபெற்றதில் மதுரை வடக்கு மாவட்ட செயலாளர், வணிகவரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் பி.மூர்த்தி அறிமுகம் செய்து வைத்து சிறப்புரையாற்றினார். இந்த மாபெரும் கூட்டத்தில் பல்லாயிரக்கணக்கானோர் பங்கேற்றார்கள். அதன் விபரம் வருமாறு:-

இந்தியா கூட்டணி சார்பில் விருதுநகர் நாடாளுமன்ற தொகுதி இந்திய தேசிய காங்கிரஸ் கட்சி வேட்பாளர் மாணிக்கம் தாகூரை அறிமுகம் செய்யும் மாபெரும் செயல் வீரர்கள் கூட்டம் திருப்பரங்குன்றம் தொகுதி சார்பாக திருப்பரங்குன்றத்திலும், திருமங்கலம் தொகுதி சார்பாக திருமங்கலத்திலும் வெகு சிறப்பாக நடைபெற்றது.

இந்த மாபெரும் கூட்டத்திற்கு மதுரை தெற்கு மாவட்ட செயலாளர் சேடப்பட்டி மு.மணிமாறன் தலைமை வகித்து உரையாற்றினார்.

மதுரை வடக்கு மாவட்ட செயலாளர் வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி வேட்பாளர் மாணிக்கம் தாகூரை அறிமுகம் செய்து வைத்து எழுச்சி உரையாற்றினார். இதுவரையில் இதுபோன்று செயல்வீரர்கள் கூட்டம் நடைபெற்றதில்லை என்பதை மெய்ப்பிக்கும் வகையில் இவ்விரு கூட்டங்களிலும் பல்லாயிரக்கணக்கான கழகத்தினர், பொதுமக்கள் குவிந்தார்கள்.

சிறப்பு மிக்க இக்கூட்டத்தில் தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் ஏர்போர்ட் பாண்டியன், கே.ஐ.மகிழன், செல்லம்பட்டி முத்து ராமன், ஞானசேகரன், மாவட்ட கழக நிர்வாகிகள் நாகராஜன், வக்கீல் ஆர். பாலாஜி, சிவனாண்டி, லதா அதியமான், கொம்பாடி தங்கம், தொகுதி பொறுப்பாளர் இலக்குவனன், மாநில அணி நிர்வாகிகள் சேதுராமன், பாச பிரபு, பொதுக்குழு உறுப்பினர்கள் சரவணக்குமார், சிவமுருகன், ஆதிமூலம், செல்வம், செந்தாமரைக்கண்ணன், இந்திரா காந்தி, ஒன்றிய செயலாளர்கள் கொ.தனபாண்டி, ராமமூர்த்தி, மதன்குமார், நாகராஜன், பாண்டி, பெரியசாமி, வேட்டையன், தனபால், தங்கபாண்டியன், ஆர்.வி. சண்முகம், தனசேகரன், திருமங்கலம் நகர செயலாளர் ஸ்ரீதர், பகுதி செயலாளர்கள் க.கிருஷ்ண பாண்டியன், போ.ஈஸ்வரன், உசிலை சிவா, மணிசேகரன், இளைஞரணி அமைப்பாளர் விமல், துணை அமைப்பாளர்கள் சுரேஷ், ஆதவன் அதியமான், நகராட்சி தலைவர் ரம்யா முத்துக்குமார், மண்டல தலைவர் சுவிதாவிமல், மகளிர் அணி கீர்த்திகா தங்கபாண்டியன், அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் மைதீன் பிச்சை, சுரேஷ், பரமசிவம் உள்ளிட்ட பல்லாயிரக்கணக்கான கழகத்தினர், கூட்டணி கட்சியினர், பொது மக்கள் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

# ஹிட்லருக்கு ஏற்பட்ட கதிதான் பிரதமர் மோடிக்கு ஏற்படும்!

## மேல்மலையனூர் பிரச்சாரத்தில் அமைச்சர் செஞ்சி மஸ்தான் பேச்சு !

செஞ்சி, ஏப்.2-

ஆரணி நாடாளுமன்றத் தொகுதியில் இந்தியா கூட்டணி தி.மு.க. சார்பில் தரணி வேந்தன்உதய சூரியன் சின்னத்தில் போட்டியிடுகிறார். இவரை ஆதரித்துசிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர்கள் நலத்துறை அமைச்சர் செஞ்சி மஸ்தான்செஞ்சி தொகுதி மேல்மலையனூர் ஒன்றியம் வளத்தி, பெருவளூர், சாத்தம்பாடி ,எய்யில், மேல் செவலம்பாடி, கோட்டப்பூண்டி, கப்பளாம்பாடி, தாழங்குணம், எதப்பட்டு, அவலூர்பேட்டை கோவில் புரையூர், நொச்சலூர், தாயனூர் மேல்மலையனூர் ஆகிய ஊராட்சிகளில் உதய சூரியன் சின்னத்திற்கு தீவிர வாக்கு சேகரித்தார்.

தொடர்ந்த பொதுமக்களிடம் உதயசூரியன் சின்னத்துக்கு வாக்கு கேட்டு முதலமைச்சரின் சாதனைகள் பட்டியலிட்ட அமைச்சர் செஞ்சி மஸ்தான் விவசாயிகளின் உயிரை பலி வாங்கியவர்பிரதமர் மோடி என்றும் விவசாயிகளின்நலனில் அக்கறை கொண்ட தமிழ்நாடு முதலமைச்சர் விவசாயிகளின் கடனை தள்ளுபடி செய்து அவர்களுக்கு இலவச மின் திட்டத்தை வழங்கியது திராவிட மாடல் அரசு என்றும் ஏழை எளிய மக்களை வஞ்சிக்கும் மோடி அரசை அகற்ற வேண்டும் சர்வாதிகார ஆட்சி நடத்தும் பிரதமர் மோடிக்கு ஹிட்லருக்கு ஏற்பட்ட கதிதான் விரைவில் ஏற்படும்எனக் கூறிய அமைச்சர் செஞ்சி மஸ்தான் இந்தியாவை காப்பாற்ற இந்தியா கூட்டணி வெற்றி பெற செய்ய முதலமைச்சர் தலைமை தாங்குகிறார்.

இந்தியாவில் உள்ள எல்லோருடைய மனதிலும் ஸ்டாலின் குரல் ஒலிக்கிறது எனதெரிவித்த அவர் முதலமைச்சர் செய்த சாதனைகள் அடங்கிய துண்டு பிரசுரங்களை வழங்கிதிமுக வேட்பாளர் தரணி வேந்தனை வெற்றி பெற செய்ய வேண்டும் என அவர் கேட்டுக்கொண்டார்.

முன்னதாக பெருவளூர், சாத்தாம் பாடி, மேல்செவலாம்பாடி, அவலூர் பேட்டை, கோவில் புரையூர், மேல்மலையனூர் உள்ளிட்ட ஊராட்சிகளில் வாக்கு சேகரிக்க சென்ற அமைச்சர் செஞ்சி மஸ்தான், வேட்பாளர் தரணி வேந்தனுக்கு பெண்கள் ஆரத்தி எடுத்துஆயிரக்கணக்கான பெண்கள் பங்கேற்று உற்சாக வரவேற்பு அளித்தனர்.

இதில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் செந்தமிழ்ச் செல்வன், தி.மு.க. தலைமைக்காக தேர்தல் பொறுப்பாளர் அன்பழகன், மேல்மலையனூர் ஒன்றிய பெருந்தலைவர் கண்மணி நெடுஞ்செழியன், ஒன்றிய செயலாளர்கள் நெடுஞ்செழியன், நாராயணமூர்த்தி, சாந்தி சுப்பிரமணியன், துணை சேர்மன் விஜயலட்சுமி முருகன், மாவட்ட கவுன்சிலர் செல்லி ராமசரவணன்,பொதுக்குழு உறுப்பினர் செல்வராஜ். செஞ்சி தொகுதி தேர்தல் பொறுப்பாளர் மணிவண்ணன்ஒன்றிய நிர்வாகிகள் மண்ன ஏழுமலை, உதயகுமார், ஆறுமுகம், ஜெய்சங்கர், தமிழரசி பாண்டியன், சரவணன், ரேணு, கோபால கிருஷ்ணன், அர்ஷத்,செந்தில்குமார், ரகுராமன், காந்திமதி, தாகிரா வஹாப், வெங்கடேசன், ஒன்றிய கவுன்சிலர்கள் பெருமாள், சக்தி, கிருஷ்ணமூர்த்தி, செல்வி ரகுபதி, ராமமூர்த்தி, ஷாகிலா அர்ஷத்,யசோதா சந்திரகுப்தன், கலா நாராயணமூர்த்தி,விஜயகுமார், ஊராட்சி மன்ற தலைவர்கள் விஜயலட்சுமி ஜெயக்குமார், கந்தவேலு, சந்திரா வீராசாமி, வான்மதி உதயகுமார், சரவணன், ராமசாமி, செல்வம், ரமேஷ்,அன்னபூரணி மணி, லாவண்யா ராஜேஷ், வெங்கடேசன், நிர்வாகிகள் எஸ்.பி. சம்பத், தோப்பு சம்பத், இளைஞர் அணி மணிகண்டன், மாணவரணி ஆறுமுகம், பொறியாளர் அணி தலைவர் டிபி ஏழுமலை, ஐ.டி.நிர்வாகிகள் மணிவண்ணன், சதீஷ்,மேல்மலையனூர் கணேசன் உள்ளிட்ட தோழமைக் கட்சி நிர்வாகிகள் கலந்துகொண்டு வாக்கு சேகரித்தனர்.



நெல்லை நாடாளுமன்றத் தொகுதி காங்கிரஸ் வேட்பாளர் ராபர்ட் புரூஸ் நெல்லை டவுன் சந்திப்பிள்ளையார் கோவில் அருகில் நெல்லை மத்திய மாவட்டப் பொறுப்பாளர் மைதீன்கான் தலைமையில் தீவிர வாக்குச் சேகரிப்பு பணியில் ஈடுபட்டு கை சின்னத்திற்கு வாக்குச் சேகரித்தார். உடன் மாநில வர்த்தக அணி இணை செயலாளர் மாலை ராஜா, மாநகரச் செயலாளர் சுப்பிரமணியன், மேயர் சரவணன் ஆகியோர் உள்ளனர்.

### நாடாளுமன்றத் தேர்தல் - 2024

# தி.மு.க. துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி, தேர்தல் பிரச்சாரம்!

(திருத்தப்பட்டது)

## தலைமைக் கழகம் அறிவிப்பு



2024 ஏப்ரல்-19 அன்று நடைபெற உள்ள நாடாளுமன்றத் தேர்தலையொட்டி, தி.மு.க. துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி, அவர்கள் 'இந்தியா' கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து தேர்தல் பிரச்சாரம் செய்து வாக்குச் சேகரிக்கிறார். அதன் விவரம் பின்வருமாறு :

| தேதி | நாடாளுமன்றத் தொகுதி |
|---|---|
| 02.04.2024 (செவ்வாய்க்கிழமை) | திருநெல்வேலி<br>தென்காசி |
| 04.04.2024(வியாழக் கிழமை) | மதுரை<br>தேனி |
| 08.04.2024 (திங்கட் கிழமை) | சென்னை தெற்கு |

"அண்ணா அறிவாலயம்"
சென்னை-18.
29.03.2024

தலைமைக் கழகம்,
தி.மு.க.



தேனி நாடாளுமன்றத் தொகுதி கழக வேட்பாளர் தங்க தமிழ்ச்செல்வனுக்கு தேனி வடக்கு மாவட்டம் போடி நகரத்தில்அதிக வாக்கு வாங்கி தரும் கிளைசெயலாளர்களுக்கு ஒரு பவுன் தங்க மோதிரம், நகர மன்ற உறுப்பினர்களுக்கு ஒரு பவுன் தங்க மோதிரம் பரிசாக வழங்கப்படும் என்று போடி நகர செயலாளர் புருஷோத்தமன் ஆலோசனை கூட்டத்தில் தெரிவித்தார்.